## ஏப்ரல் - 23 - உயிர்ப்புக்கால 2ம் வார ஞாயிறு

### இறை இரக்கப் பெருவிழா

**என்றென்றும் உள்ளது அவரது பேரன்பு என் இஸ்ரயேலல் மக்கள் சாற்றுவார்களாக! திபா. 118:2**

### முதல் வாசகம் : திருத்தூதர் பணி 2 : 42 – 47

அக்காலத்தில் திருமுழுக்குப் பெற்றவர்கள், திருத்தூதர் கற்பித்தவற்றிலும் நட்புறவிலும் அப்பம் பிடுவதலும் இறைவேண்ட லிலும் உறுதியாய் நிலைத்திருந்தார்கள். மக்கள் அனைவரிடமும் அச்சம் நிலவியது. திருத்தூதர் வழியாகப் பல அருஞ்செயல்களும் அடையாளங்களும் நிகழ்ந்தன. நம்பிக்கைக் கொண்டோர் அனைவரும் ஒன்றாயிருந்தனர் எல்லா உடைமைகளையும் பொதுவாய் வைத்திருந்தனர். நிலபுலன்களும் பிற உடைமைகளும் உடையோர் அவற்றை விற்று, அனைவருக்கும் அவரவர் தேவைகளுக்கேற்ப பகிர்ந்தளித்தனர். ஒவ்வொரு நாளும் அவர்கள் ஒரே மனத்தோடு கோவிலில் தவறாது கூடிவந்தார்கள் பேருவகை யோடும் எளிய உள்ளத்தோடும் வீடுகள் தோறும் அப்பத்தைப் பிட்டு, உணவைப் பகிர்ந்து உண்டு வந்தார்கள். அவர்கள் கடவுளைப் போற்றி வந்தார்கள் எல்லா மக்களுடைய நல்லெண்ணத்தையும் பெற்றிருந்தார்கள் ஆண்டவரும் தாம் மீட்டுக் கொண்டவர்களை நாள்தோறும் அவர்களோடு சேர்த்துக் கொண்டேயிருந்தார்.

**பதில்பாடல் :** ஆண்டவருக்கு நன்றி செலுத்துங்கள். ஏனெனில்
அவர் நல்லவர். என்றென்றும் உள்ளது அவரது பேரன்பு

### இரண்டாம் வாசகம்: 1பேதுரு 1 : 3 - 9

நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் கடவுளும் தந்தையுமானவர் போற்றி! அவர் தம் பேரிரக்கத்தின்படி, இறந்த இயேசு கிறிஸ்துவை உயிர்த்தெழச் செய்து நமக்குப் புதுப்பிறப்பு அளித்து உள்ளார். இவ்வாறு குன்றா எதிர்நோக்குடன் நாம் வாழ்கிறோம். அழியாத, மாசற்ற, ஒழியாத உரிமைப் பேறும் உங்களுக்கென விண்ணுலகில் வைக்கப்பட்டுள்ளது.நீங்கள் கொண்டுள்ள நம்பிக்கையின் வழியாய் மீட்புக்காகக் கடவுளுடைய வல்லமையால் பாதுகாக்கப்பட்டு வருகிறீர்கள். இம்மீட்பு இறுதிக் காலத்தில் வெளிப்பட ஆயத்தமாய் உள்ளது.இப்போது சிறிது காலம் நீங்கள் பல்வகைச் சோதனைகளால் துயருற வேண்டியிருப்பினும், அந்நாளிலே பேருவகை கொள்வீர்கள். அழியக்கூடிய பொன் நெருப்பினால் புடமிடப்படுகிறது. அதைவிட விலையுயர்ந்த உங்கள் நம்பிக்கையும் மெய்ப்பிக்கப்படவே துயருறுகிறீர்கள். இயேசு கிறிஸ்து வெளிப்படும்போது அந்நம்பிக்கை உங்களுக்குப் புகழும் மாண்பும் பெருமையும் தருவதாய் விளங்கும்.நீங்கள் அவரைப் பார்த்ததில்லை எனினும் அவர்மீது அன்பு செலுத்துகிறீர்கள். இப்பொழுதும் நீங்கள் அவரைக் கண்டதில்லை எனினும் நம்பிக்கை கொண்டு சொல்லொண்ணா, ஒப்பற்ற மகிழ்ச்சியடைந்து பேருவகை கொள்கிறீர்கள்.இவ்வாறு உங்கள் நம்பிக்கையின் குறிக்கோளான ஆன்ம மீட்பையும் பெறுகிறீர்கள்.

### நற்செய்தி : யோவான் 20 : 19 – 31

அன்று வாரத்தின் முதல் நாள். அது மாலை வேளை. யூதர்களுக்கு அஞ்சிச் சீடர்கள் தாங்கள் இருந்த இடத்தின் கதவுகளை மூடிவைத்திருந்தார்கள். அப்போது இயேசு அங்கு வந்து அவர்கள் நடுவில் நின்று, "உங்களுக்கு அமைதி உரித்தாகுக!" என்று வாழ்த்தினார். இவ்வாறு சொல்லிய பின் அவர் தம் கைகளையும் விலாவையும் அவர்களிடம் காட்டினார். ஆண்டவரைக் கண்டதால் சீடர்கள் மகிழ்ச்சி கொண்டார்கள். இயேசு மீண்டும் அவர்களை நோக்கி, "உங்களுக்கு அமைதி உரித்தாகுக! தந்தை என்னை அனுப்பியது போல நானும் உங்களை அனுப்புகிறேன்" என்றார். இதைச் சொன்ன பின் அவர் அவர்கள்மேல் ஊதி, "தூய ஆவியைப் பெற்றுக் கொள்ளுங்கள். எவருடைய பாவங்களை நீங்கள் மன்னிப்பீர்களோ, அவை மன்னிக்கப்படும். எவருடைய பாவங்களை மன்னியாதிருப்பீர்களோ, அவை மன்னிக்கப்படா" என்றார். பன்னிருவருள் ஒருவரான திதிம் என்னும் தோமா, இயேசு வந்தபோது அவர்களோடு இல்லை. மற்றச் சீடர்கள் அவரிடம், "ஆண்டவரைக் கண்டோம்" என்றார்கள். தோமா அவர்களிடம், "அவருடைய கைகளில் ஆணிகளால் ஏற்பட்ட தழும்பைப் பார்த்து, அதில் என் விரலை விட்டு, அவர் விலாவில் என் கையை இட்டாலன்றி நான் நம்பமாட்டேன்" என்றார். எட்டு நாள்களுக்குப்பின் அவருடைய சீடர்கள் மீண்டும் உள்ளே கூடியிருந்தார்கள். அன்று தோமாவும் அவர்களோடு இருந்தார். கதவுகள் பூட்டப்பட்டிருந்தும் இயேசு உள்ளே வந்து அவர்கள் நடுவில் நின்று, "உங்களுக்கு அமைதி உரித்தாகுக!" என்று வாழ்த்தினார். பின்னர் அவர் தோமாவிடம், "இதோ! என் கைகள். இங்கே உன் விரலை இடு. உன் கையை நீட்டி என் விலாவில் இடு. ஐயம் தவிர்த்து நம்பிக்கைகொள்" என்றார். தோமா அவரைப் பார்த்து, "நீரே என் ஆண்டவர்! நீரே என் கடவுள்!!" என்றார். இயேசு அவரிடம், "நீ என்னைக் கண்டதால் நம்பினாய். காணாமலே நம்புவோர் பேறுபெற்றோர்" என்றார். வேறு பல அரும் அடையாளங்களையும் இயேசு தம் சீடர்கள் முன்னிலையில் செய்தார். அவையெல்லாம் இந்நூலில் எழுதப்படவில்லை. இயேசுவே இறைமகனாகிய மெசியா என நீங்கள் நம்புவதற்காகவும், நம்பி அவர் பெயரால் வாழ்வு பெறுவதற்காகவுமே இந்நூலில் உள்ளவை எழுதப்பெற்றுள்ளன.

**தியானம்:** இறைஇரக்கப் பெருவிழாவை கொண்டாடும் இன்றைய நாளில் எமக்காக சிலுவையில் தொங்கியபோது இறைமகன் இயேசுவின் விலாவில் ஈட்டியால் குத்தப்பட்டு வழிந்தோடிய இரத்தமும், நீரும் உலகிலுள்ள அனைத்து மக்களின் பாவங்களை கழுவி தூய்மைப்படுத்தியது. இவற்றை நாங்கள் நம்பிக்கையுடன் ஏற்று வாழ வெண்டுமென்று அவர் விரும்புகின்றார். இயேசு உயிர்த்தெழுந்து சீடர்களுக்கு காட்சியளிக்கும் பொழுது கரங்களையும், விலாவையும் காட்டினார். அவர்களும் இயேசு உயிர்த்தெழுந்ததை நம்பினார்கள். அவரும் அவர்களுக்கு தூய ஆவியை பொழிந்து மற்றவர்களும் நம்பிக்கையுடன் வாழ தயார் படுத்த வேண்டுமென்று அவர்களை அனுப்புகின்றார். அவர்களும் இயேசுவின் படிப்பினையின்படி அப்பம் பிட்பதிலும், நட்புடன் உறவாடுவதிலும், செபிப்பதிலும், இறைவார்த்தை வாசிப்பதிலும் நிலையாய் இருந்து இறைவனுடன் ஒன்றித்திருந்தார்கள். ஆனால் நாங்கள் எமது குடும்ப வாழ்விலும் சரி, பொதுவாழ்விலும் சரி செபவாழ்வானது அரிதாகவே காணப்படுகின்றது. இச்செபமானது இறைவனுக்கும் மனிதனுக்கும் உறவுப் பாலமாக அமைகின்றது. இதன் மூலம் பரந்து காணப்படும் அன்பானது இறையன்பு, பிறரன்பு என்று இரண்டு வகைப்படுத்தப்படுகின்றது. அயலவர்களுடன் அன்பு கொண்டு வாழும் பொழுது இறைவனை அன்பு செய்கின்றோம். அவ்வேளையில் அவ்வன்பு இறையன்பாக மாறுகின்றது. இவ்வாறு அன்பு கொண்டு வாழும் பொழுது ஆவியானவரின் வல்லமை எம்மீது பொழியப்பட்டு எமது சொல்லும் செயலும் இறைவனுக்கு ஏற்புடையனவாகக் காணப்படும். எனவே இன்றைய நாளில் எமக்கு தமது இரக்கத்தை வெளிப்படுத்திய இறையேசுவில் நம்பிக்கை கொண்டவர்களாக செபவாழ்வை எம்மத்தியில் ஏற்படுத்தி எம்மை மாற்றியவர்களாக அவருடன் நாமும் உயிர் பெற்றெழுவோம்